**இலங்கை - வியட்நாம் அரசியல் ஆலோசனைகளின் மூன்றாவது கூட்டம்**
**2018 ஏப்ரல் 11ஆந் திகதி, கொழும்பு**

இலங்கை - வியட்நாம் அரசியல் ஆலோசனைகளின் மூன்றாவது கூட்டமானது சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மட்டத்தில் 2018 ஏப்ரல் 11ஆந் திகதி கொழும்பில் நடைபெற்றது.

இலங்கைக் குழுவானது வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. சுமித் நாகந்தல அவர்களினால் தலைமை தாங்கப்பட்டதுடன், வியட்நாம் குழுவானது வியட்நாம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பிரதி அமைச்சர் திரு. டேங் டின் குவை அவர்களினால் தலைமை தாங்கப்பட்டது.

இருதரப்பு அரசியல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்களை மேலும் ஒருங்கிணைத்து, மேம்படுத்திக் கொள்வதற்கான ஈடுபாட்டினை இலங்கையும், வியட்நாமும் மீள உறுதிப்படுத்திக்கொண்டன.

பரஸ்பர ஒத்துழைப்பு சார்ந்த பரந்த விடயங்கள் மற்றும் செயற்பாட்டிலுள்ள விவசாயம், மீன்பிடி, கல்வி மற்றும் பயிற்சி, வர்த்தகம் மற்றும் முதலீடு, கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு, கலந்துரையாடப்பட்டன.

பகிரப்பட்ட நலன்களை மேம்படுத்துவதற்கான பிராந்திய மற்றும் பல்தரப்பு தளங்களிலும், பரஸ்பரம் முக்கியமான பிரச்சினைகளிலும் தொடர்ச்சியாக இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தினை இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

வியட்நாம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பிரதி அமைச்சர் திரு. டேங் டின் குவை 2018 ஏப்ரல் 11ஆந் திகதி பிற்பகல் வேளை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன அவர்களை சந்தித்தார்.

2011 ஒக்டோபர் மாதத்தில் இலங்கை மற்றும் வியட்நாம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுகளுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றே அரசியல் ஆலோசனைகள் வாயிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு வழியமைத்தது. இலங்கைக்கும், வியட்நாமிற்கும் இடையிலான முதலாவது மற்றும் இரண்டாவது அரசியல் ஆலோசனைக் கூட்டங்கள் முறையே 2012ஆம் ஆண்டில் கொழும்பிலும், 2013ஆம் ஆண்டில் ஹனோயிலும் நடைபெற்றன. இரண்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினதும், ஏனைய வரிசை முகவர்களினதும் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
கொழும்பு

2018 ஏப்ரல் 11ஆந் திகதி